இலக்கு

இதழ் 80

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

மே 31, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1

யாழ். நூலக எரிப்பு: இனப்படுகொலையின் எரியாத சான்று

சூ.யோ.பற்றிமாகரன்

கேட்பாரற்றுக் கிடக்கின்றன இங்கும் கீழடிகள்

க.சுரேந்திரன்

பாடசாலையில் அனுபவக் கல்வி

ச.பிரியசகி

(கிழக்குப் பல்கலைக்கழகம்)

வற்றாப்பளை கண்ணகி அம்மன்: உப்பு நீரில் விளக்கெரியும் அதிசயம்

தக்சா

மனித வாழ்வில் கோவிட்-19:

பகுதி 01

ஆதித்யன்

இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலமானார்

இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவரும், முன்னாள் தோட்ட உட்கட்டமைப்புத்துறை அமைச்சருமான திரு ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை(26) வைத்திய சாலையில் காலமானார்

திடீர் சுகவீனம் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பல னளிக்காததால் மரணமடைந்துள்ளார். இறப் பதற்கு முன்னர் அவர் சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்சவை சந்தித்திருந்தார்.

ஆறுமுகனின் மரணச் சடங்கு இன்று (31) இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மரண வீட்டை தேர்தல் பிரச்சாரமாக்கியதாக குற்றச்சாட்டு

கடந்த செவ்வாய்க்கிழமை மரணமடைந்த இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆறுமுகன் தொண்ட மானின் மரணச் சடங்கை அவரின் மகன் ஜீவன் தொண்டமான் தேர்தல் பிரச்சார மேடையாக பயன்படுத்துவதாக சிறீலங்கா தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

ஆறுமுகனின் பிரேதப் பெட்டியை திறந்த வாகனம் ஒன்றில் வைத்து மலையகத்தில் உள்ள தோட்டங்களில் ஊர்வலமாக ஜீவன் எடுத்துச் சென்றுள்ளார். தேர்தல் பிற்போடப்பட்ட போதும் இது விதிமுறை மீறல் என சிறீலங்கா தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையத்தின் செயலாளர் மஞ்சுளா கஜநாயகே தெரிவித்துள்ளார்.

இது தற்போதைய கொரோனா நெருக்கடி நிலமையின் சுகாதார விதிகளையும் மீறும் செய லாகும். இதற்கு எதிராக தேர்தல் ஆணைக் குழு வும், சிறீலங்கா காவல்துறையினரும் நடவடிக்கை எடுக்காதது வருத்தம் தருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் எலிக்காய்ச்சல் எச்சரிக்கை

சிறீலங்காவில் எலிக் காய்ச்சல் பரவும் சாத்தியங்கள் உள்ளதால் நெல் வயல்களுக்கு அரு கில் வசிக்கும் மக்கள் 100 மில்லிகிராம் டொக்சி சைக்கிலின்(Doxycycline) எனப்படும் மருந்தின் இரண்டு குளிசைகளை தினமும் பயன் படுத்துமாறு சிறீலங்கா தொற்றுநோய் தடுப்பு பிரி வின் அதிகாரி வைத்தியர் சுடத் சமரவீரா தெரிவித் துள்ளார்.

கடந்த 4 மாதங்களில் 500 பேர் இந்த நோயி னால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 9 பேர் இறந்து ள்ளனர். எலிகளின் சிறுநீர் நெல் வயல்களில் அல் லது ஆறுகளில் உள்ள நீரில் கலப்பதால் இந்த நோய் ஏற்படுகின்றது. விரைவாக நோய் கண்ட றியப்பட்டால் இலகுவில் குணப்படுத்த முடியும். களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, அனு ராதபுரம், பொலநறுவை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த இடங்களில் உள்ள வயல் கள் மற்றும் நீர் நிலைகளில் இறங்குவதை மக்கள் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்து ள்ளார்.

சஜித் பிரேமதாசா
ஐ.தே.க யில் இருந்து நீக்கம்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அதன் பிரதித் தலை வர் சஜித் பிரேமதாசா மற்றும் 98 உறுப்பின ர்கள் நீக்கப்பட்டுள்ள தாக ஐ.தே.க யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

கட்சியின் விதிகளை மீறி அவர்கள் வேறு சின்னத்தில் போட்டியிடுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஐ.தே.க ஆட்சியில் இருந்த போதும், எதிர்த் தரப்பில் இருந்த போதும் நாட் டின் அபிவிருத்தியிலும், பாதுகாப்பிலும் அதிக கவனம் செலுத்தியிருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவுக்கும் வெட்டுக்கிளிகள் பரவும் ஆபத்து

பயிர்களை அழிக்கும் வெட்டுக்கிளிகள் சிறீலங்காவுக்கும் பரவும் ஆபத்துக் கள் உள்ளதாக சிறீலங்காவின் விவசாய பணிப்பாளர் எம். டபிள்யூ. வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

பாலைவன வெட்டுக்கிளிகள் பயிர்களை அழிக்கும் தகமை கொண்டவை. இவை தென் னாசிய நாடுகளுக்கு பரவியுள்ளதுடன், வட இந்தி யாவுக்கும் பரவியுள்ளன. தென்னிந்தியாவை நோக்கி அவை செல்லாத போதும், காற்றின் திசை மாறினால் அவை சிறீலங்காவை நோக்கி வரலாம். எனவே விவசாயிகளும், அதிகாரிகளும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசின் இணையத்-தளங்கள் மீது சைபர் தாக்குதல்

சிறீலங்கா அரசின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு திணைக்களம் மற்றும் பொது நிர்வாக அமைச்சு ஆகிய திணைக்களங்களின் இணையத் தளங்கள் மீது நேற்று (30) இனந்தெரியாதவர்கள் சைபர் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக சிறீ லங்கா வான்படையின் சைபர் பாதுகாப்பு தலை மையகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் வான்படையி னர் குறிப்பிட்ட திணைக்களங்களுக்கு தெரிவித்து ள்ளதுடன், கணணி அவசர நடவடிக்கை பிரிவி னர் இணையத்தளங்களை மீண்டும் சீர்செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

வடமராட்சி குண்டு வெடிப்பு
சட்டவிரோத மண் வியாபாரிகளின் வேலை

வடமாரட்சியில் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு அண்மையில் கடந்த புதன்கிழமை (27) இடம்பெற்ற குண்டு வெடிப்பு தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட குண்டு, இரண்டு மீன்ரின் களில் தயாரிக்கப்பட்டதாக சிறீலங்கா காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த குண்டு வெடிப்பு தாக்குதலில் இர ண்டு சிறீலங்கா காவல்துறையினர் சிறு காயம டைந்துள்ளதாக தெரிவித்துள்ள சிறீலங்கா காவல் துறையினர், சந்தேகத்தின் அடிப்படையில் துன் னாலை குடவத்தை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக மண் ஏற்றும் குழுவி னரே இதனை மேற்கொண்டதாக யாழ். காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறீலங்காவில் விரைவாக பரவும்
டெங்கு காய்ச்சல்

கடந்த ஐந்து மாதங்களில் சிறீலங்காவில் 19,825 பேர் டெங்கு காய்ச்சல் நோயினால் பாதி க்கப்பட்டுள்ளதாகவும், 22 பேர் மரணமடைந்துள் ளதாகவும் சிறீலங்கா சுகாதார அமைச்சர் பவித் திராதேவி வன்னியாராட்சி நேற்று முன்தினம் (29) தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டவர்களை விட டெங்கு நோயி னால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் இறந்தவர் களின் எண்ணிக்கை அதிகமாகும். எனவே மக்கள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண் டும். 2019ஆம் ஆண்டு டெங்கு நோயினால்105,049 பேர் பாதிக்கப்பட்டதுடன், 150 பேர் மரணமடைந் துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 – இறப்பு எண்ணிக்கை 370,870 ஆக உயர்வு

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இன்று (31) வரை உல கில் உள்ள நாடுகளில் 370,870 பேர் மரணம டைந்துள்ளனர். மேலும் 6,153,370 பேர் பாதிக்கப்பட்டுள்ளது டன், பாதிக்கப்பட்டவர்களில் 2,734,548 பேர் குண மடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா வே முன்னணியில் உள்ளது. அங்கு 105,557பேர் மரணமடைந்துள்ளதுடன், 1,816,820 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். இத்தாலியில் 33,340 பேர் மரண மடைந்துள்ளனர், ஸ்பெயினில் 27,125 மரண மடைந்துள்ளனர்.

பிரான்ஸ் இல் 28,771 பேர் மரணமடைந்து ள்ளதுடன், பிரித்தானியாவில் 38,378 பேர் மரண மடைந்துள்ளனர். பிரேசிலில் 28,834 பேர் மரண மடைந்துள்ளனர்.

நாளை வன்னியில் கவனயீர்ப்பு போராட்டம்

நாளை (01) திங்கட்கிழமை பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வவுனியாவில் கடந்த 1196 நாட்களாக போராட்டம் மேற்கொள்ளும் காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் சங்க தலைவி கா.ஜெயவனிதா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த வாரம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் நூறு நாள் வேலைத் திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் எனது மகளான ஜெரோமி உட்பட நான்கு பேர் உள்ளனர்.

இன்று எனது மகளின் பிறந்த தினம். ஒவ்வொரு பிறந்த நாளிலும் எனது பிள்ளை என்னிடம் வரும் என்று எண்ணி இன்று தெரு ஓரத்தில் இருந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த கண்ணீர் 11 வருடங்களாக நீண்டு செல்கின்றது.

எமது வேதனையை தீர்ப்பதற்கு யாரும் முன்வரவில்லை. அனைவரது வாக்குறுதிகளும் எமக்கு ஏமாற்றமாகவே போய் விட்டது. எனது பிள்ளை என்னிடம் வரும் வரைக்கும் இந்த போரா ட்டத்தை தொடர்ந்து கொண்டே இருப்பேன்.

அத்துடன் எமது போராட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை 1200 ஆவது நாளை எட்டுகின்ற நிலையில் மாபெரும் கவனயீர்ப்பு போரா ட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் என கூறியுள்ளார்.

மூத்த தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் சபேசன் சாவடைந்தார்

எமது மூத்த தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர் சபேசன் அவர்கள் 29-05-2020 வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு சாவடைந்தார் என்ற செய்தி கவலைகொள்ளச் செய்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் மீதும் தலைமை மீதும் அளவற்ற பற்றோடு செயற்பட்ட சபேசன் அண்ணை, மிகவும் ஆக்கபூர்வமான அரசியல் விடுதலை போராட்டம் தொடர்பான கட்டுரைகளை எழுதி, அனைவர் மனத்திலும் இடம்பிடித்தவர்.

எமது மக்கள் சந்தித்த முள்ளிவாய்க்கால் பேரழிவால், மிகவும் மனமுடைந்துபோன அவர், அதனைத் தொடர்ந்த நாட்களில் மனரீதியாக அதன் பாதிப்புகளில் இருந்து மீளமுடியாதவராக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்.

மெல்பேர்ண் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் முன்னாள் பொறுப்பாளராகவும் பரப்புரை பொறுப்பாளராகவும் செயற்பட்டு, இன்று மீளாத்துயில் கொள்ளும் சபேசன் அண்ணையின் நினைவுகளுடன் இவரது இழப்பின் துயரால் வாடும் குடும்பத்தினருடன் எமது கரங்களை இறுக பற்றிக் கொள்கின்றோம்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – அவுஸ்திரேலியா

இலக்கு

தமிழ் இனத்தின் வரலாற்று சான்றுகளை பாதுகாக்க நாம் முன்வர வேண்டும்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாகாணங்களில் ஒன்றான கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்லியல் பொருட்களை பாதுகாப்பதற்கான பணியினை சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா தனது முன்னாள் படைத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவிடம் கையளித்துள்ளார்.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளரான குணரட்ண, ஒரு தமிழின விரோதியும், இனஅழிப்பு குற்றவாளியுமாவார். அதனை அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் உறுதிப்படுத்தியிருந்தன. நீதிக்குப் புறம்பாக பல ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்து ஒரு இனஅழிப்பை மேற்கொண்ட குற்றவாளி தற்போது தமிழ் இனத்தின் தொன்மை வாய்ந்த அடையாளங்களை அழிப்பதன் மூலம் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் நோக்கத்தை முற்றாக நிறைவேற்ற முனைந்து நிற்கின்றார்.

முன்னர் இந்து காலாச்சார அமைப்பிடம் இருந்த தொல்லியல் பொருட்கள் மற்றும் வரலாற்று இடங்களின் பாதுகாப்பு பொறுப்பு பின்னர் சிறீலங்காவின் தெல்லியல் ஆய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் தமிழ் இனத்தின் வரலாற்று அடையாளங்கள் மறைக்கப்பட்டு பௌத்த சிங்கள வரலாற்று தொன்மைகள் முதன்மைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் திட்டமிட்டு அத்துமீறி உருவாக்கப்படும் பௌத்த ஆலயங்கள், சைவ மற்றும் கிறிஸ்த்தவ ஆலயங்களின் அடையாளங்களை அழிக்கும் செயற்பாடுகள் என்பன ஒருபுறம் இடம்பெற்று வருவதுடன், சைவ ஆலயங்கள் மற்றும் தமிழ் மக்களின் தொன்மையான இடங்களை சிங்களவர்களின் அல்லது பௌத்த மதத்தின் அடையாளங்களாக மாற்றும் முயற்சிகள் என்பவற்றையும் சிறீலங்கா அரசு காலம் காலமாக முன்னெடுத்து வருகின்றது.

எனினும் 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் சிறீலங்கா அரசின் இந்த செயற்பாடுகள் மேலும் விரைவாகவும், விரிவுபடுத்தப்பட்டும் வருகின்றது. அதாவது ஒரு இனத்தின் கலாச்சாரத்தையும், வரலாற்றையும் அழித்து விட்டால் அந்த இனம் எதிர் காலத்தில் தானாக அழிந்து விடும் என்ற வரலாற்றை சிறீலங்கா அரசு நன்கு உணர்ந்து செயற்பட்டு வருகின்றது. கலாச்சாரமும், வரலாறும் தான் ஒரு இனத்தின் இருப்புக்கு முக்கியமானது. எனவே தான் சிங்கள மக்களும், உயர் பதவிகளில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளும் தங்களின் இல்லங்களில் தமது முன்னோர்கள் பயன் படுத்திய பொருட்கள் மற்றும் இனத்தின் வரலாற்று சின்னங்கள் என்பவற்றை பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

அதே சமயம், ஏனைய இனங்களின் வரலாற்று இடங்களை கைப்பற்றுவதனையும், அழிப்பதனையும் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். போரின் பின்னரான கடந்த 11 ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் சிறீலங்கா அரசு தமிழ் மக்களின் பல வரலாற்று இடங்களை சிங்கள அல்லது பௌத்த மதம் சார் இடங்களாக மாற்றியுள்ளது. அம்பாறையில் 246 இடங்களும், திருமலையில் 74 இடங்களும், மட்டக்களப்பில் 83 இடங்களும் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போதைய நியமனம் தமிழ் மக்களின் வரலாற்றுத் தொன்மையை முற்றாக அழிக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது. எனவே இதனை தடுப்பதற்கும் தமிழ் மக்களின் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தென்மை வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கும் தமிழ் வாரலாற்றுத்துறை ஆய்வாளர்களும், தமிழ் பல்கலைக்கழகங்களும், தாயக மற்றும் புலம்பெயர் மக்களும் முன்வர வேண்டும்.

ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட வரலாற்று சின்னங்கள், இடங்கள் தொடர்பான தரவுகளை திரட்டுதல், அவற்றை ஆதாரங்களுடன் ஆவணப்படுத்துதல், அதனை உறுதிப்படுத்துதல், தமிழ் இனத்தின் வரலாறு தொடர்பாக எழுதப்பட்ட நூல்களை பல மொழிகளில் மொழிபெயர்த்து உலக அரங்கில் அதனை வெளிக் கொண்டு வருதல், தாயகத்தில் உள்ள வரலாற்று சான்றுகளை பாதுகப்பதற்குரிய பொறி முறைகளை உருவாக்குதல் போன்றவற்றை தமிழ் இனம் உடனடியாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டியது தற்போது அவசியமாகின்றது.

– ஆசிரியர்

கேட்பாரற்றுக் கிடக்கின்றன இங்கும் கீழடிகள்

க.சுரேந்திரன்

இலங்கையில் தமிழினத்தின் இருப்பு என்பது மிகத் தொன்மையானது. அது பழங்கால இதிகாசங்கள், இலக்கியங்கள் போன்ற அகச் சான்றுகளால் மட்டுமன்றி, கல்வெட்டுகள், கால வோடுகள், பண்பாட்டுச் சின்னங்கள், வழிபாட்டு சின்னங்கள் என புறச்சான்றுகளாலும் ஐயம் திரி புக்கு இடமின்றி மெய்ப்பட்டு நிற்கிறது. வடக் கின் ஆனைக்கோட்டை முதல் கிழக்கின் சங்கமன் கண்டி வரை பரந்தளவில் இவற்றை காண முடி யும். இவற்றுக்கு அப்பால் தென்பகுதியிலும் பெருந்தொகையான தொல்பொருட்கள் காணப் படுகின்றன.

இருந்த போதிலும் அண்மையில் கிழக்கில ங்கையில் வெளிப்பட்டு நிற்கும் தமிழினத்தின் கி.மு காலத்து பூர்வீக அடையாளங்கள் மிக வலி மையானவையும் தனிச்சிறப்பு மிக்கவையுமாகும். இந்த வெளிப்பாடு, இதற்கு முந்தைய இலங்கை யின் தமிழ் குடியினரின் வரலாறு பற்றிய மேலோ ட்டமான கண்ணோட்டத்தை கேள்விக்குள்ளாக்கி நிற்கிறது.

அண்மைக்காலத்தில் இப்பகுதிகளில் மேற் கொண்ட ஆய்வுகளின் பலனாக, தமிழர்களின் மொழி, வாழ்வியல் பற்றிய அற்புதமான பல விட யங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இவற்றை நோக்கும் போது, தமிழ் நாட் டின் கீழடிக்கு நிகரான, சிலவற்றில் அதனை யும் விஞ்சுமளவிற்கு தமிழ் பிராமி சாசனங்களும் ஏனைய தொல்பொருட்களும் இங்கு நிறைந்து கிடக்கின்றன. இவை நிலமட்டத்திற்கு மேலு ள்ளவை மாத்திரமே. அகழப் போனால் இன்னும் அநேகம் கிடைக்கும். ஆனால் இருப்பவைகளே அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் ஏன்காணாமல் போகச் செய்யப்பட்டும் வரும் வேளையில், தமிழர் அடையாளங்களை அகழ்ந்தெடுக்க யாரும் அனுமதிக்கப் போவதில்லை.

இவ்வாறான ஒரு நிலையில், இலங்கையில் தமிழரின் பண்டைய வரலாற்றை அறிவுபூர்வமாக ஆதாரங்களுடன் வெளிக்கொணரும் பணியில் உழைக்கின்ற உணர்வாளர்கள் அனைவரும் போற் றுதலுக்குரியவர்களே. குறிப்பாக பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும், அவரது குழுவினரும் மேற் கொண்ட பணிகள் பாராட்டுக்குரியவை.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப் புக் குறித்த அவரது நூலான "இலங்கைத் தமிழர் வரலாறு"

"கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்" (கிமு 250 - கிபி 300) என்ற வரலாற்று ஆய்வுநூல் இலங்கை தமிழர் வரலாற்று ஆய்வில் மிகமுக்கிய மைல்கல். இந்த நூலுக்கு அப்பாலும் அங்கு ஆய்வு செய்யப்படவேண்டிய விடயங்கள் அநேகமு ள்ளன.

தமிழ் நாட்டில் தமிழரின் தொன்மைக்கு சான்றாக ஆதிச்சநல்லூர், பூம்புகார், கொடுமணல் போன்ற இடங்கள் விளங்குகின்றன. அண்மையில் மதுரை கீழடியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பல தடைகளையும் தண்டி தமிழ் மொழியின் தொன்மையையும் தமிழினத்தின் மேம்பட்ட வாழ் வியலையும் உலகுக்கு எடுத்துக் காட்டின. அங்கு பானையோடுகளில் எழுதப்பட்ட தமிழ் பிராமி எழுத்துக்கள் கிடைக்கப்பெற்றன. அவை கிமு 600 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என கண்டறிய ப்பட்டன. இந்த கண்டறிவே கீழடியின் சிறப்புக்கு பிரதான காரணம் ஆகியது.

மட்டக்களப்பின் வெல்லாவெளியில் காணப்படும் கருங்கற்பாறையில் தமிழ் பிராமி வாசகம் செதுக் கப்பட்டுள்ளது. இதுவே இலங்கையில் கிடைத்த மிகப்பழமையான தமிழ் பிராமி வடிவம் எனப் படுகிறது. கீழடியில் கிடைத்த தமிழ் குறித்த இரு பிராமி வடிவங்கள் இரு சொற்களை அடை யாளப்படுத்தி நிற்க (ஆதன், குவிதன்) வெல்லா வெளிக் கல்வெட்டு ஒரு பொருள்தரும் வசனத்தை தந்து நிற்கிறது.

குறித்த கல்வெட்டை தமிழ கத்தையும் இலங் கையையும் சேர்ந்த கல்வெ ட்டாய்வுக் குழுவினர் முறையாகஆய்வு செய்தனர். பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வே.மகேஸ்வரன் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை யின் மூத்த கல்வெட்டாய் வாளர் முனைவர் வே.வேதா சலம் மற்றும் அவ ரின் குழுவினர் ஆய்வு செய்தனர்.

இதன்போது, தமிழகத்தின் முதுநிலை ஆய்வாளர்கள் அந்த வசனத்தை கீழ்வருமாறு பொருள்படுத்தினர். "பெருமகன் சமுதாயத்தின் சம்மதத்தோடு கொடுத்த குகை". இந்த வாக்கியம் சிறிதானாலும் அதில் நிறைந்த பொருள் கொள்ள முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

குறித்த எழுத்து வடிவத்தை அடிப்படை யாகக் கொண்டு நோக்கும் போது, அக் கல்வெட்டு இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என வும் அறியப்படுகிறது. இந்த கல்வெட்டு வாசகம், ஒரு தலைவனின் கீழ் தமிழ் எழுத்தறிவுள்ள தமிழ் மொழி பேசும் இனமொன்று இப்பகுதியில் 2300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததை உறுதி செய்கிறது.

மேலும் வெல்லாவெளிப் பகுதியில் காண ப்படும் மலைகளில் வெட்டப்பட்ட படிக்கற்கள், கற்றூண்கள், ஈமத்தாழிகளின் சிதைவுகள் நாகர்க ளின் பெயர் பொறிக்கப்பட்ட சின்னங்கள், வழி பாட்டுச்சின்னங்கள் என்பன அங்கு ஒரு மேம்பட்ட சமூக அமைப்பாக தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை காட்டி நிற்கின்றன.

கீழடி அகழ்வில் உறைகிணறுகள் காண ப்படுகின்றன. இங்கும் சுடுமண் வளையங்களைக் கொண்டு அமைக்கப்பட்டு வேலைப்பாடுகளுடன் கூடிய மேலமைப்புடன் கிணறுகள் காணப்படு கின்றன. இவற்றில் தமிழ் பிராமி வடிவங்கள் காணப்படுவது மேலும் சிறப்பானதா கும்.

மட்டக்களப்பு இலாவணை பகுதியிலும், மா வடி வே ம் பி லு ம் இவ்வகையான கிணறுகள் கா ண ப் ப டு கி ன் ற ன . இலாவணை கிணற்றில் 'வேள்ணாகன் மகன் வேள் கண்ணன்' என தமிழ் பிராமியில் எழுதப்பட்டுள்ளது. இதுதவிர வந்தாறுமூலை நீர்முகப் பிள் ளை யார் ஆலயத்தில் செதுக்கப் பட்ட நீள்சதுர கற்களாலான நாகர் காலக் கிணறும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வரலாற்றின் தொடக்க காலத்திய செங்கல் கட்டிடச் சான்றுகள் கிடைப் பது மிகவும் அரிதாகக் கருதப்படும் நிலையில், கீழடியில் பெருமளவான செங்கல் கட்டிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன் சுட்ட மண் ணால் செய்யப்பட்ட நீர்வடிகால் தொகுதிகளும் காணப்படுவது சிறப்பு.

இங்கும் கட்டிடப் ப யன் பா ட் டி ல் செ ங் க ற் க ள் இருந்துள்ளமைக்கான உறுதியான சான்றுகள் உள்ளன. படிவெட்டின மலைப் பகுதி உள்ளி ட்ட பலவிடங்களில் செங்கற் கட்டிடச் சிதை வுகள் காணப்படுகிறன. அதுமட்டுமன்றி கருங் கல்லில் பொழியப்பட் டவடிகால் பகுதிகளும் இங்கு காணப்படுகின் றன.இவற்றிற்கு மேலாக கூரை ஓடுகளும் காணப்படுவதாக கூறப்படுகிறது.

கீழடியில் பெருமளவான மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டன.இங்கு பாலாமடுவில்தமிழ் பிராமியில் பெயர் பொறித்த மட்பாண்டங்களும் சுடுமண் படிமங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றுக்கு அப்பால், பூர்வீக தமிழர்கள் வீடுகளில் அன்றாடம் பயன்படுத்திய பல்வேறு பட்ட பொருட்களும் இப்பகுதிகளில் பெருமளவு காணப்படுகின்றன. கருங்கல்லினால் செய்யப் பட்ட உரல்கள், அம்மி-குளவிகள் என இவை அமை கின்றன. மட்டக்களப்பில் களுவாஞ்சிகுடியில் ஒரு பெரிய கருங்கல் செக்கு காணப்படுகிறது. இதில் நாகர்களின் பெயர்கள் தமிழ் பிராமி வடிவில் எழுதப்பட்டுள்ளன. இந்த செக்கின் கொள்ளளவு கிட்டத்தட்ட 40 கிலோ இருக்கும் எனக் கூறப்படு கிறது. இவற்றினைக் கொண்டு அம் மக்களின் உணவு முறைகளை மட்டுமன்றி விவசாய மேம் பாட்டையும் நாம் ஊகிக்க முடியும்.

இவற்றிக்கு அப்பால் இப்பகுதிகளில் காணப்படும் கற்றூண்கள், மலைப்படிகள், கருங்கற் சிற்பங்கள் போன்றவை அம்மக்களின் கலைத்திறனை வெளி ப்படுத்துவதோடு மட்டுமன்றி, அவர்களின் உலோ கப் பொருள் உற்பத்தியையும் எடுத்துக் காட்டுவன வாகவும் உள்ளன.

தமிழர் என்றால் 'வீரம்' என்ற சொல்லே எமக்கு உடனடியாக நினைவுக்கு வரும். இந்தவ கையில் இங்கு வாழ்ந்த மக்கள் தமக்கான தனித் துவமான போரியல் பண்புகளையும் கொண்டி ருந்தனர் என்பதற்கான சான்றுகள் இங்கு கிடைத்து ள்ளமை, தமிழினம் பெருமை கொள்ளக்கூடிய ஒரு விடயமே.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் காணப்படும் போர் வீர

னின் உருவம் பொறித்த செங்கல், மிக முக்கியத் துவம் வாய்ந்ததாகும். போர் வீரன் ஒருவன் வில்லை கையிலேந்தியி ரு ப் ப தாக, அந்த உருவம் அமைந்துள்ளது. இது போர் வீரன் ஒரு வனின் உருவம் என்பதை தமிழக முதுநிலை தொல்லியலா ளர் சு.இராசகோபால் உறுதிப்படுத்தியுள்ளார். இதுவரை தமிழ் நாட்டில்கூட இத்தகைய பழமை வாய்ந்த தமிழர் போர் மரபு சார்ந்த அடையாளம் கண்டறியப்படவில்லை. இந்த உருவத்தில் 'மணிநாகன்' என தமிழ் பிராமி வடிவில் எழுதப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தவிர, இப்பகுதியில் காணப்படும் குதிரை வடிவ சிற்பங்கள், மற்றும் அடையாளங்கள், இங்கு வாழ்ந்த மக்கள் குதிரைகளை பயன்படுத்தி யமையை கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது. வெல்லாவெளி பகுதியில் உள்ள களுமுந்தன் வெளியிலும் இலாவணையிலுமுள்ள குதிரை வடி வங்களை இங்கு உதாரணமாகக் கூறமுடியும். யானைகளையும் இந்த மக்கள் தமது பயன்பாட்டில் வைத்திருந்தனர் என்பதை காரைதீவில் உள்ள

தொடர்ச்சி 09பக்கம்

பாடசாலையில் அனுபவக் கல்வி

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியின் அடித்தளமாக கல்வியே விளங்குகிறது. இதனை உணர்ந்தே உலக நாடுகள் பலவும் தங்கள் நாட்டின் கல்வி முன்னேற்ற வடடிக்கைகளுக்கு முதன்மை கொடுத்து வருகின்றன.

இலங்கையிலும் கல்வி மேம்பாட்டுக்கான பல்வேறு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 8 வருடங்களுக்கு ஒரு தடவை கல்வித் திட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்துதல், நவீன விடயங்களை உட்புகுத் தல், நடைமுறை பிரச்சினையின் தீர்வை காணுவதற் கான உத்திகளினை கல்வியில் ஒன்று சேர்த்தல், புதிய தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வியின் அறிமுகம், அனுபவக் கல்வி முறையை புதிய அணுகுமுறைகளுடன் கையாளுதல் என இந்த நட வடிக்கைகள் விரிந்து செல்கின்றன.

தற்காலத்தில் தொழிற் கல்வியினை பெரி தும் முன்னிறுத்தி கல்வி நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படும் நிலையில், அனுபவம்சார் கல்வி நிலையை ஆரம்பப் பிரிவு தொடக்கம் உயர் பிரிவு வரை நடைமுறைப்படுத்தும் செயலில் அரசாங்கம் இறங்கியுள்ளது

அனுபவக் கல்வி என்பது ஒரு மாணவனி ற்கு புலன்களின் மூலம் உணரப்படும் பிரச்சினை கள், அவதானம், செயற்பாடுகள் என்பவற்றின் தொகுப்பே ஆகும். அந்த வகையில் அனுபவமான விடயங்கள் நிலைத்து ஆழமான பதிவுகளையும், பிரச்சினைக்கான சிறந்த தீர்வினையும் உருவாக் கும். இதனால்தான் அனுபவ ரீதியான கல்வியின் முக்கியம் உலக நாடுகளில் உணரப்பட்டுள்ளது.

அனுபவக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஆரம்ப காலங்களில் உணரப்பட்டுள்ளது என்பதை கல்வித் தத்துவங்களான இயற்கை வாதம் (ரூசோ), பயன்பாட்டு வாதம்(ஜோன்டூயி) போன்றவற்றின் மூலம் எம்மால் அறியக் கூடியதாக உள்ளது. அனுப வக் கல்வி பற்றி இவர்கள் இருவரும் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ரூசோ- காட்சிப் பொருட்கள் மூலம் பெறும் அனுபவங்களே அனுபவ கல்வியாகும்.

ஜோன் டூயி- பரிசோதனை ரீதியான விஞ் ஞான முறை அறிவு பெறுவதற்கான ஊடகமாக உணரப்பட்டது.

அனுபவங்களை அனுபவங்கள் ஊடாகவே அனுபவங்களாகவே பிள்ளைகளிற்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அனுபவக் கல்வி தொடர்பாக இயற்கை வாதமும் பயன்பாட்டு வாதமும் பல நடைமுறை ரீதியான ஆய்வுத்தத்துவ கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. அவற்றில் பின் வரும் கருத்துக்கள் முக்கியம் பெறுகிறது.

இயற்கை வாதம்

- **சுற்றுலாக்கள் மூலம் அறிவு, அனுபவம் பெறல் வேண்டும்.**
- **தொடுதல், நுகர்தல், பார்த்தல் என்பன கல்விக் கான முக்கிய விடயங்களாகும்.**
- **கற்பித்தல் என்பது கருத்தற்ற செயற்பாடுகளை மனனம் செய்வதல்ல.**

பயன்பாட்டு வாதம்

- **கல்வி அனுபவம் மூலம் கிடைக்கப் பெற வேண் டும்.**
- **பாடசாலையில் வழங்கும் அறிவும் சமூகத்தில் பெறும் அனுபவமும் ஒத்ததன்மை கொண்டதாக காணப்பட வேண்டும்.**
- **பாடசாலை கற்றல் அனுபவமானது வாழ்க்கைக் கற்றல் அனுபவங்களோடு தொடர்புபட்டு காண ப்பட வேண்டும்.**
- **வகுப்பறையில் மேசைகளை அகற்றி வேலைக் களங்கள், மணல், செங்கல் கொண்டு வர வேண்டும்.**
- **பாடசாலையை விட பாடசாலைக்கு வெளியே கற்றலுக்கான சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.**

மேற்கூறப்பட்டவிடயங்களின்அடிப்படை

ச.பிரியசகி
(கிழக்குப் பல்கலைக்கழகம்)

யில் அனுபவ கல்வியின் புரிதல் தத்துவங்களாக வடிவமைக்கப்பட்ட நிலையை எம்மால் அவதானி க்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் ரூசோ, டூயி ஆகிய இருவரும் ஆராய்தல், பிரச்சினை தீர்த்தல், அவதானிப்பு ஆகிய முறைகளையே கல்வியில் முதன்மைப்படுத்தியுள்ளனர்.

மேலும் அனுபவ கல்வி முறை இலங்கை பாடசாலைகளில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் படுகின்றது என்று பார்த்தால், ஆரம்பப் பிரிவில் புதிதாக 1ஆம் தரக் கல்வியை பயில வரும் மாண வர்களுக்கு "பாடசாலை புகுநிலை செயற்பாடு" எனும் புதிய விடயம் நடைமுறைப்படுத்தப்படு கின்றது.

மாணவர்களுக்கு தங்கள் வீடுகளின் நினை வை ஏற்படுத்தும் வகையில் அவர்களுடைய விளையாட்டு பொருட்கள், பொம்மைகள் போன்ற வற்றைக் குறிப்பிட்ட வீடு போன்ற அமைப்புடன் காணப்படும் மாதிரி அமைப்பிற்குள் வைத்து விளையாடுவர். இது மாணவர்களுக்கு தங்கள் வீட்டில்தான் உள்ளோம் என்ற மகிழ்ச்சியான நிலைக்கு இட்டுச் செல்வதுடன் உளநிலையை சீராக பேணுவதற்கான ஒரு உத்தியாகவும் கையாள ப்படுகின்றது.

அதுமாத்திரம் அன்றி ஆரம்பப் பிரிவு மா ணவர்களின் வகுப்பறை அமைப்பில் புத்தக மூலை, சித்திர ஆக்க மூலை, விளையாட்டுப் பொருட்கள் மூலை, ஆடல் பாடல் மூலை, சதுரங்க விளையாட்டு மூலை, மணல் மூலை போன்ற அனுபவ ரீதியாக தங்களுடைய ஆக்கங்கள், செயற்பாடுகள், மணலில் வீடுகட்டல், புத்தகங்களை வாசிப்பதற்கான புத் தகங்கள் அடங்கிய தொகுதி என்பவற்றை உள்ள டக்கிய வகையிலேயே வகுப்பறைகள் உருவாக் கப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் ஒவ் வொரு விடயத்தையும் அனுபவ ரீதியாக கற்றுக் கொள்வதற்கான சூழல் அமைத்துக்கொள்ளப் படுகின்றது.

16 கருப்பொருள்களை கொண்ட சுற்றா டல் சார்ந்த செயற்பாடுகள் ஆரம்பப் பிரிவில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. அதற்காக வாரத்தில் கிட்டத்தட்ட 6மணித்தியாலங்கள் ஒதுக்கப்படுகி ன்றது. புதிய கட்டடங்கள், பூங்காக்கள், சந்தை அமைப்புக்கள், கோவில்கள் போன்றவற்றை நேர டியாக அழைத்துச் சென்று கற்பிப்பதன் மூலம் சிற ந்த கருத்தாழத்துடன் கூடிய கல்வியை வழங்கக் கூடியதாக உள்ளது.

அடுத்ததாக இன்றைய பாடசாலைகளில் முக்கியமாக மாணவர் பாராளுமன்ற தேர்தல் முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உதார ணமாக 03.07.2019 மகாஜன கல்லூரியில் இத் தேர்தல் முறை நடாத்தப்பட்டு மாணவ அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் வினை த்திறன் மிக்க பாடசாலை நிர்வாக செயற்பாடு. இணைப்பாடவிதான செயற்பாடு, ஆளுமை மிக்க தலைவர்களை உருவாக்கல் போன்ற செயற்பாடு களுக்கான ஒரு ஒத்திகையுடன் கூடிய அனுபவம் வழங்களாக காணப்படுகின்றது. இதனுடன் இணைந்த வகையில் பல்வேறு முறைகளின் ஊடாக அனுபவக் கல்வியை வழங்க வேண்டி யதில் ஆசிரியர்களின் கடமை அதிகமாக காணப் படுகின்றது.

பின்லாந்து நாட்டை எடுத்துக் கொண்டால் ஒரு பாடம் தொடர்பான அறிவினை வாய்வழியாக வழங்கி 3 மணித்தியாளங்களில் நேரடிக்காட்சிக்கு உட்படுத்தி மாணவர்களிற்கு கற்பித்த விடயம் தொடர்பான முழுத்தெளிவு வழங்கும் முறை காணப்படுகின்றது. சுவீடன் நாட்டில் முழுக்க முழுக்க வாழ்க்கைக்குத் தேவையான அனுபவ அறிவினை கல்வியாக வழங்குகின்றனர். மாணவர் களை கடைகளிற்கு அழைத்து சென்று எவ்வாறு பொருட்களை பெற்றுக் கொள்வது, விற்பது என்பது தொடர்பான பல அனுபவ கற்றல் வழங்கப் படுகின்றது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் இதனை மையமாக கொண்டே சந்தை முறை மாணவர்க ளால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் பொருட்களை விற்கவும், பெற்றுக் கொள்ளவும் மாணவர்கள் பழகிக் கொள்கின்றனர்.

மகாத்மாகாந்தியுடைய ஆதாரகல்வி தொட ர்பான சிந்தனை முறையும் அனுபவ கல்வியின் தாக்கம் பற்றி கூறுகின்றது. அந்த வகையில் கற்றலுடன் தொழிலில் ஈடுபட்டால்தான் தொழில் தொடர்பான அனுபவமும், நாட்டின் அபிவிருத்தி யில் அக்கறையும் பிறக்கும் என்கின்றார். உதா

தொடர்ச்சி 09பக்கம்

யாழ். நூலக எரிப்பு:
இனப்படுகொலையின் எரியாத சான்று

யாழ்ப்பாண பொது நூலக இயக்கம் என்பது பிரித்தானியக் காலனித்துவ அரசால் ஈழத்தமிழர்களுக்கும் அனைத்து மக்களுக்குமான வாக்குரிமை, டொனமூர் அரசியலமைப்பு மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னணியில் 1931ஆம் ஆண்டில் மக்களின் அறியாமையை நீக்கி மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கான பொதுக் கோளத்தை உருவாக்கி, சிறந்த முறையில் அவர்கள் மக்களாட்சியில் பங்கேற்க வைக்க வேண்டும் என்ற தலையாய நோக்கில், யாழ்ப்பாண மாவட்ட மன்றில் செயலாளராகப் பணிபுரிந்த கே. எம். செல்லப்பா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

தன்னுடைய வீட்டிலேயே அறையொன்றில் தின இதழ்களையும் வார, மாத இதழ்களையும் வாங்கி வைத்து மக்களிடை வாசிப்புப் பழக்கத்தைத் தனது முயற்சியால் ஊக்குவித்து வந்த இவர் 1933ஆம் ஆண்டு கார்த்திகை பதினொராம் நாள் தமிழர்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் மலையகத் தமிழர்கள் அதிகம் வாழும் கண்டி, ஆங்கிலம் படித்த தமிழர்களும் பிரித்தானியாவால் உருவாக்கப்பட்ட தலைநகரில் தொழிலுக்காகவும் உயர்கல்விக்காகவும் குடியமர்ந்த தமிழர்கலளும் அதிகமாக வாழும் கொழும்பிலும் "இலவச மத்திய வாசிகசாலை" அமைக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையைப் பிரித்தானிய அரசிடம் முன்வைத்தார். இந்து சாதனம், சிலோன் பிரீபிரஸ் போன்ற ஊடகங்கள் இவரின் இக்கோரிக்கையைத் தாங்கி வெளி வந்தன.

இதன் விளைவாக யாழ்ப்பாணப் பொது நூலகத்தை அமைப்பதெப்படியென ஆராயும் பொருட்டு 04.06.1934 யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் மத்திய இலவச தமிழ் வாசிகசாலைச் சங்கம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட சங்கத்திலேயே யாழ்ப்பாண பொது நூலகம் கருவாகியது.

1934 யூன் 4 இல் கருவாகிய பொது நூலகம், 1934 ஆவணி முதல் திகதி முதல் ஆஸ்பத்திரி வீதியில் 25 ரூபா வாடகைக் கட்டிடத்தில் 844 நூல்களுடனும் 30 பத்திரிகைகள் உடனும் மாதம் 20 ரூபா ஊதியம் பெற்றுத் தன்னையே நூலக வளர்ச்சிக்கு அர்ப்பணித்த நூலகருடனும் செயற்பட்டு, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபராக இருந்த அருட் தந்தை லோங் அவர்களின் பெருமுயற்சியால் விரிவு பெற்று, 1959இல் யாழ்ப்பாணத்தின் வான் அடையாளமாக விளங்கிய குவிந்த கூம்புக் கோபுரத் துடன் கூடிய அழகிய அனைத்துலக தரமுள்ள நூலகமாக நிலைபெற்று, ஆசியாவின் தலைசிறந்த தமிழ் நூலகமாகவும் சேவையினை அறிவுக் களஞ்சியமாகவும் உலகில் பெருவளர்ச்சி பெற்று, 47 ஆண்டுகள் அதிசயிக்கத்தக்க சேவையை வழங்கி வந்த நிலையிலேயே 1981ஆம் ஆண்டு யூன் மாதம் 01ம் திகதி அதிகாலை சாம்பல் மேடாக, சிறீலங்கா அமைச்சர் காமினி திசநாயக்காவின் வழி காட்டலின் கீழ் சிங்களப் பொலிசாரால் எரித்

சு.யோ.பற்குமாகரன்

தழிக்கப்பட்டது.

சிறீலங்காவின் முன்னாள் அரச அதிபர் ரணசிங்க பிரேமதாசா அவர்கள் 1991இல் புத்தளம் முஸ்லீம் கல்லூரியில் அக்டோபர் மாதத்தில் உரையாற்றிய பொழுது வெளிப்படையாகவே சிறீலங்கா அமைச்சர் காமினி திசநாயக்கா அவர்களே யாழ்ப்பாண 1981 அசம்பாவிதங்களுக்குப் பொறுப்பு என வெளிப்படையாக எடுத்துரைத்தார். காமினி திசநாயக்காவுடன், அமைச்சர் சிறில்மத்தியூ என்னும் சிங்கள இனவெறி பௌத்த மதவெறிச் செயற்பாட்டாளரும் யாழ்ப்பாணத்தில் இருந்தார். யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் தங்கவைக்கப் பட்டிருந்த சீருடை அணிந்த சிங்களப் பொலிசாரும், அவருடன் உடன் பங்கேற்ற சீருடை அணியாத சிங்களக் காடையர்களாலும் யாழப்பாணம் பொது நூல்நிலையத்திற்கு தீ மூட்டப்பட்ட பொழுது அதனைத் தடுப்பதற்கு விரைந்த யாழ்ப்பாண மாநகரசபையின் இரவுக்காவல்காரர்களை தீயை அணைக்க நெருங்கவிடாது பொலிசார் விரட்டியடித்ததின் மூலம் தாங்கள் திட்டமிட்டுத்தான் யாழ்ப்பாண பொது நூலகத்தை 31ஆம் திகதி இரவிரவாக எரிக்கின்றார்கள் என்பதை உறுதி செய்தனர். தீ வானளாவ கொழுந்து விட்டு எரிகையில் தமிழர்களுடைய அறிவுப்பலத்தையே வீழ்த்திவிட்ட மகிழ்வில் சிங்களப் படையினர் பாட்டுப்பாடி பைலா இட்டு மகிழ்ந்த கொடுமையைக் கண்டு கண்கலங்கியவர்கள் பலர். 96000க்கு மேற்பட்ட

நூல்களையும் ஆவணங்களையும் கொண்டிருந்த இந்த யாழ்ப்பாண பொது நூலகம் தீக்கிரையாகி எரிவதைத் தனது சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாடியில் இருந்து கண்ணுற்ற யாழ். சென்.பற்றிக்ஸ் கல் லூரியின் பல்துறைப் பேராசிரியரும், இந்தப் பொது நூலகத்தின் காப்பாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்த, பல முனைவர் பட்டங்களையும் நூற்றுக்கணக்கான மொழிகளில் புலமையையும்கொண்டிருந்த பேரறிஞரும் உலகப் புகழ்பெற்ற ஆய்வாளருமான அருட்தந்தை முனைவர் ஹயசிந்து தாவீது அடிகள் திகைப்பால் மாரடைப்பு ஏற்பட்டு காலமானார். இது எந்த அளவுக்கு யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு அறிவுலகையும் கல்வி உலகையும் பாதித்தது என்ப தற்கு மிகச் சிறந்த சான்றாகியது.

அதே வேளை பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தை அறிமுகம் செய்து, அனைவருக்கும் வாக்குரிமை வழியாக ஈழத்தமிழரின் மக்களாட்சியினை தொடக்கி வைத்த பொழுது அதனை வலுப்படுத்த மக்களுக்கு அறிவூட்டி அரசியல் மயப்படுத்த 1931இல் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகம் - 1972 இல் ஈழத்தமிழருக்கு மக்களாட்சி உரிமையினை மறுத்து அவர்களை நாடற்ற தேச இனமாக அவர்களின் சொந்தத் தாயகத்திலேயே மாற்றிய சிறீலங்கா அரசாங்கம், தமிழர்களின் மக்களாட்சியைப் பலப்படுத்த உதவி வந்த யாழ்ப்பாண பொது நூலகத்தை எரித்து, ஈழத் தமிழ் மக்களின் மக்களாட்சி பங்களிப்பைத் தாங்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வெளி அடையாளமாக அதனைச் செய்தனர். இந்த வகையில் யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு என்பது சிறீலங்காவின் ஈழத் தமிழினப் பண்பாட்டு இனஅழிப்புத் தொடர்திட்டத்தின் ஒரு அலகாகவே அமைந்தது.

ஈழத்தமிழர்களின் பண்பாட்டுத் தாயகமென வரலாற்று வெளிப்பாடு கொண்ட யாழ்ப்பாணத்தில் ஈழத் தமிழர்கள் நடாத்திய, உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 10.01.1974இல் 11 ஈழத்தமிழர்களை இனஅழிப்புக்கு உள்ளாக்கி தொடக்கி வைத்த சிறீலங்காவின் ஈழத்தமிழர் பண்பாட்டு இன அழிப்பே, தமிழர்களை ஆயுத எதிர்ப்பின் மூலம் தம்மைப் பாதுகாக்கும் தப்பிப் பிழைக்கும் வாழ்வியலை உருவாக்கியது. மீளவும் மீளவும் ஈழத்தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளையும் பண்பாட்டுப் பதிவுகளையும் மானிடவியல் தொல்லியல் தடயங்களையும் இயன்றளவுக்கு இல்லாமல் செய்து அவர்களின் வரலாற்றுத் தாயகத் தன்மையை நிலைகுலைத்து அவர்களை சிறீலங்காவின் சிறுபான்மையினம் என்று பாராளுமன்றப் பெரும்பான்மைச் சர்வாதிகார ஆட்சியை அவர்கள் மேல் நிலைப்படுத்துதல் என்பதே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் 1948 முதலான தொடர் அரசியல் செயற்பாடாகத் தொடர்கிறது.

இதனையும் 1991இல் சிறீலங்காவின் முன்னாள் அரச அதிபர் ரணசிங்க பிரேமதாசா அவர்களின் பேச்சே வெளிப்படுத்தியது. "வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார்? இதற்குப் பிரதான காரணம் காமினியே, பத்து வருடங்களுக்கு முன் 1981இல் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சமுதாயங்களுக் கிடையேயான உறவுகளில் ஒரு கறைபடிந்த துயரமான சம்பவங்களாகும். பாராளுமன்றத்தில் மாவட்ட அபிவிருத்தியைக் கொண்டு வந்து நாம் அதிகாரத்தைப் பரவலாக்க முயன்ற பொழுது காமினி

தொடர்ச்சி 09 பக்கம்

வற்றாப்பளை கண்ணகி அம்மன்: உப்பு நீரில் விளக்கெரியும் அதிசயம்

தமிழ் நாட்டின் வன்னி பெருநிலப் பரப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் திருவிழாவின் போது 8 நாட்கள் உப்பு நீரில் விளக்கெரியும் அதிசயமானது இன்று வரை தொடர்ந்து வருகின்றது சிறப்பிற்குரியதாகும். எதிர்வரும் ஜூன் 08ஆம் திகதி இரவு பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளது. இம்முறை பாரிய பொங்கல் நிகழ்வாக இல்லாது பாரம்பரிய ரீதியில் மேற் கொள்ளப்படும் கிரியைகளை மட்டும் மேற் கொள் ளவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் குறிப்பிட்டுள் ளனர்.

தற்போதைய கொரோனா தொற்று காரண மாக இம்முறை திருவிழாவானது மட்டுப்படுத்தப் பட்ட 72பேருடனேயே நடைபெறவுள்ளதாகவும், சம்பிரதாய பூசை வழிபாடுகள் மாத்திரம் இடம் பெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உற்சவத்திற்கு செல்வதற்கு பொது மக்களுக்கு முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது என்று கோவில் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். நாட்டு நிலையை கருத்தில் கொண்டு பொது மக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு கோவில் நிர்வாகத்தினர் கேட்டுக் கொ ண்டுள்ளனர்.

15 நாட்கள் திருவிழாக் காலத்தைக் கொண்டதாக உள்ள இந் நிகழ்வு 3 திங்கள் நடை பெறும். முதல் திங்கள் பாக்குத்தெண்டல் என்ற நிகழ்வு நடைபெறும். கடந்த 25ஆம் திகதி நடை பெற்றது. இந்நிகழ்வில் 9 வீடுகளிலிருந்து ஆலய பூசகர்கள் காளாஞ்சி பெறுவார்கள். இம்முறை இக்காளாஞ்சி பெறும் நிகழ்விற்கு 3பேரே செல்ல அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் இந் நிகழ்வு ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளையில் இடம்பெற்றதால், முன்னரே பாதுகாப்புத் தரப்பி னரிடம் இருந்து அனுமதி பெறப்பட்டி ருந்தது.

இரண்டாவது நிகழ்வு ஜூன் 01ஆம் திகதி தீர்த்தம் எடுக்கும் நிகழ்வாகும். அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் முள்ளியவளை காட் டா விநாயகர் ஆலயத்திலிருந்து சிலாவத்தை கடற் கரைப் பகுதிக்கு தீர்த்தம் எடுக்க செல்வார்கள். அங்கு கடலில் இறங்கி தாம் கொண்டு சென்ற பித்தளை குடம் ஒன்றில் பொங்கி வரும் கடல் அலையிலிருந்து நீரை எடுத்தக் கொள்ளுவார்கள். இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு இம்முறை 30 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்விலும் பொது மக்கள் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தீர்த்தம் எடு த்து வரும் போது மக்கள் தங்கள் வீடுகளில் நிறை குடம் வைத்து வழிபாடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அதிகளவான தேங்காய்களை உடைத்து மக்கள் வழிபாடு செய் வது வழக்கம். ஆனால் இம்முறை ஒருவர் ஒரு தேங் காயை மட்டுமே உடைப்பதற்கு அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

தீர்த்தம் எடுத்து வந்ததும் அன்றிரவே முள் ளியவளையிலுள்ள காட்டா விநாயகர் ஆலயத்தில் அந்த உப்பு நீரில் விளக்கு ஏற்றப்படும். 07ஆம் திகதி வரை அங்கு அந்த விளக்கு எரியும். 07ஆம் திகதி இரவு காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் வைத்து படையல் போடப்படும். அன்றிரவு உப்பு நீர் விளக்கு வற்றாப்பளை விநாயகர் ஆலயத்திற்கு எடுத்து வரப்படும். எடுத்து வரப்படும் விளக்கானது வற்றாப்பளை ஆலய மூலஸ்தான அம்மன் முன் வைக்கப்பட்டு பொங்கல் விழா ஆரம்பமாகும். 08ஆம் திகதி முழுவதும் வற்றாப்பளையில் பொங்கல் நிகழ்வு நடைபெறும். இரவு 12 மணியள வில் பாரிய பொங்கல் பானை வைத்து பொங்கல் நிகழ்வு நடைபெறும். இந்த பானை வைப்பதற்கு முன்னர் பொங்கல் கிரியைகள் நடைபெறும். பானை வைப்பவர் தியானத்தில் இருந்தவாறே பொங்கல் பானையை வைத்து பொங்கல் நிகழ் த்துவார். அவ்வேளையில் பறையிசை ஒலிக்கப் படும் அதிகாலையில் உப்பு நீர் விளக்கு தானாக அணைந்து விடும். இதுவே இந்த பொங்கலின் சிறப்பு அம்சமாக உள்ளது.

தக்சா

இந்தப் பொங்கல் நிகழ்வு நடத்தப்படுவத ற்கு வரலாற்று கதைகள் உள்ளதோடு, இந்த கோவி லின் சிறப்பு அதிசயங்கள் பலவும் உள்ளது.

முதன்முதலாக இந்த வழிபாடானது விவ சாயிகளினால் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 1950ஆம் ஆண்டு இந்தப் பொங்கல் நிகழ்வு ஆரம் பிக்கப்பட்டது. பின்னர் 1958ஆம் ஆண்டு ஆலய பரிபாலன சபை நிர்வகிக்கப்பட்டு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டை சேர்ந்த இலங் கையை ஆண்ட கஜபாகு மன்னன், சேர மன்னன் கண்ணகிக்கு விழா எடுத்த போது அவ்விழாவில் கலந்து கொண்டான் என்றும், அவனே ஈழத்தில் (இலங்கை முன்னர் ஈழம் என்றே அழைக்கப்பட் டது) கண்ணகிவழிபாட்டைஅறிமுகப்படுத்தினான் என்றும் வரலாறு கூறுகின்றது. இதற்கமைவாக அவன் ஈழத்தில் பத்து இடங்களில் கண்ணகி வழி பாட்டை ஆரம் பித்தான் என்றும், அந்த வகை யில் பத்தாவது இடத் தில் வழிபாட்டிற்காக கண்ணகி சிலையை வற்றாப் பளையில் வைத்து வணங்கி னான் என்றும், பத்தாவது இடத்தில்வைத் தமை யால் பத்தாம்பளை என்ற சொல் மருவி வற்றாப் பளை என்று வந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. பளை யென்பது தங்குமிடத்தைக் குறிக்கும். இவ் வாறாக வட ஈழத்திலேயே 30 கண்ணகி அம்மன் கோவில்கள் இருப்பதாக அறியப்படுகி ன்றது.

பின்னர் ஈழத்தில் வழிபட்ட கண்ணகி வழி பாட்டை ஆறுமுகநாவலர் எதிர்த்ததுடன் அந்தக் கோவில்கள் மனோன்மணி அம்மன் கோயில் களாகவும், இராஜராஜேஸ்வரி கோவில்களாகவும் மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் தற்போதும் வற்றாப்பளையில் கண்ணகி அம்மன் கோவிலாகவே வழிபடப்படுகின்றது.

பொங்கலுக்கான விளக்கமாகவும் ஒரு வரலாற்று கதை உள்ளது. நந்திக் கடலோரத்தில் ஆடு மேய்க்கும் சிறுவர்கள் ஒரு வயதான மூதாட் டியை சந்தித்ததாகவும், அவர் தனக்கு பசி என்று கூறியதால், அவர்கள் பொங்கல் செய்து கொடுத் ததாகவும், பின்னர் அவர் இருண்டு விட்டது விளக் கேற்றுங்கள் என்று சொன்ன போது, அவர் களிடம் விளக்கேற்றுவதற்கான எந்தப் பொருளும் இருக்கவில்லை என்று கூற கடலில் உள்ள உப்பு நீரில் விளக்கேற்றுமாறு அந்த வயதான மூதாட்டி கூறியதாகவும், சிறுவர்கள் உப்பு நீரில் விளக்கேற்றியதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிகழ்வை சிறுவர்கள் ஊருக்குள் சென்று கூற அவர்கள் அந்த இடத்திலேயே கோவில் அமை த்து வழிபாட்டை மேற்கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது. சிறுவர்களிடம் அந்த வயதா னவர் தனக்கு பொங்கல் வைக்குமாறும், வைகாசி பௌர்ணமியை அண்டிய திங்கட்கிழமை தான் வருவதாகவும் கூறிச் சென்றதாகவும் வரலா ற்றுக் கதை உள்ளது.

கோவில் தலவிருட்சமாக பனிச்சமரம் விளங்குகின்றது. இந்த பனிச்சமரம் தற்போதும் அங்கு உள்ளது. போர்த்துக்கேயர் ஆட்சிக் கால த்தில் போர்த்துக்கேய மன்னன் கோவில்களை அழித்ததாகவும், அந்த வேளையில் வற்றாப்பளை யில் வந்து கோவிலை தாக்க முனைந்த போது அந்த பனிச்சமரம் குலுங்கி காய்களை அந்த மன்னன் மீது வீசியதாகவும் கூறப்படுகின்றது. அதற்குப் பின்னர் அந்த பனிச்சமரம் பூக்கவோ காய்க்கவோ இல்லை என் றும் கூறப்படுகின்றது.

1996இற்கு முற்பட்ட காலத்தில் முல்லைத் தீவு இராணுவத்தினர் வசமே இருந்தது. 1996 ஓயாத அலைகள் மூலமே முல்லைத்தீவு விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது. முல்லைத்தீவில் இராணுவத்தினர் இருந்த சமயம் வற்றாப்பளை கோவிலில் பொங்கல் நடைபெற்ற வேளை இரா ணுவத்தினர் முல்லைத்தீவில் இருந்து வீசிய எறிகணை வீச்சினால் கோவிலில் பொங்கல் உற்ச வத்தில் கலந்து கொண்ட நூற்றுக் கணக்கான மக்கள் காயமடைந்ததுடன், பலர் கொல்லப்ப ட்டும் உள்ளனர். இந்த பொங்கல் நிகழ்வு உலக செஞ்சிலுவைச் சங்க அனுமதியுடன் அரசா ங்கத்தின் அனுமதி பெற்றே நடைபெற்றது. இத் தாக்குதலில் செஞ்சிலுவைச் சங்க பணியாளர் களும் காயங்களுக்கு உள்ளானார்கள் என்பது குறி ப்பிடத்தக்கது. இந்நிகழ்வு நடைபெற்ற பின்னரே முல்லைத்தீவு விடுதலைப் புலிகளால் வெற்றி கொ ள்ளப்பட்டது.

2009 போர் மௌனிக்கப்பட்ட பின்னர் பொங்கல் உற்சவம் நடைபெற இருந்த சமயம் இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டிருந்தனர். பொங்கல் உற்சவத்திற்கு மறுத்த இராணுவத்தினர் பின்னர் மக்களை அனுமதித்தனர். அத்துடன் தாங் களும் இந்த பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு உலங்கு வானூர்தியில் மலர்தூவி வணக்கம் செலுத்தினர்.

கோவில் உற்சவத்திற்கு எறிகணை வீச்சி னால் மக்களை கொன்ற அதே இராணுவத்தினர் இன்று கோவிலில் வழிபாடு மேற்கொள்கின்றனர். இம்முறை பொங்கல் நிகழ்விற்காக கோவில் வீதிகளை துப்புரவு செய்ததுடன், கோவில் சுற்றாட லில் வேப்பமரங்களை இராணுவத்தினர் நாட்டி, கோவிலை பராமரித்து வருகின்றனர்.

இம்முறை பொங்கல் உற்சவத்தில் மக் களை கலந்து கொள்ள வேண்டாம் என்று கோவில் நிர்வாகத்தினர் அறிவுறுத்தியிருந்தாலும், அதை மக் கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது தெரியவில்லை. மக்கள் பொங்கல் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக கூடுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

• • •

கறுப்பின மக்களுக்கு எதிரான அமெரிக்காவின் வன்முறைக்கு எதிராக தொடரும் ஆர்ப்பாட்டங்கள்

கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக அமெரிக்க காவல்துறையினர் தொடர்ச்சியாக மேற் கொண்டு வரும் வன்முறைகளை எதிர்த்து கறுப் பின மக்கள் நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் போராட்டங்கள் தற்போது மிகப்பெரும் எதிர் ப்பாக மாற்றம் பெற்றுள்ளது.

கடந்த வாரம் மினியப்பொலி நகரில் கறுப்பு இனத்தவர் ஒருவரை சிறு குற்றச் செயல் தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்த அமெரிக்க காவல் துறையினர் கைது நடவடிக்கையின் போது அவரின் கழுத்துப் பகுதி யை தனது முழங்காலால் தொடர்ச்சியாக அழுத் தியதால் கைது செய்யப்பட்ட ஜோர்ச் பொலே யிட் என்ற அமெரிக்க கறுப்பு இன ஆண் மரண மடைந்துள்ளார்.

கைது நடவடிக்கையினை காணொளி மூலம் படம்பிடித்த பாதசாரிகள், அதனை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்ததால் கறு ப்பின மக்களுக்கு எதிரான அமெரிக்க வெள்ளை யினத்தவரின் அடக்குமுறைகள் அம்பலப்படுத்த ப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் தன்னால் மூச்சு விட முடியவில்லை என பல தடவை காவல்துறை அதிகாரியிடம் மன்றாடிய போதும், அதனை அவர்கள் பொருட்படுத்தாததும் காணொளியில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம், அமெரிக்காவில் பெரும் கலவரங்களை ஏற்படுத்தியுள்ளது. படுகொலை யில் ஈடுபட்ட காவல்துறை அதிகாரியை வழமை போல கைது செய்ய மறுத்த அமெரிக்க அரசு தற்போது அவரை கைது செய்துள்ளதுடன், அவர் மீது கொலை குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டு ள்ளது.

எனினும் அமெரிக்காவில் வன்முறைக ளும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன.மினியாப்பொலிநகரில் உள்ள காவல் நிலையம் தீயிடப்பட்டுள்ளது. பல வர்த்தக நிலையங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. ஒரு நகரில் ஆரம்பமாகிய கலவரங்கள் தற்போது பல நகரங்களுக்கும் பரவியுள்ளது.

கெந்துக்கி, அத்திலான்டா, சிக்காக்கோ, ஜோர்ஜியா என பல மாநிலங்களுக்கும் பரவியுள் ளதுடன், சில மாநிலங்களின் ஊரடங்கு உத்தரவுக ளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் தே சிய பாதுகாப்பு படையினர் மற்றும் இராணுவத் தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கைது நடவடிக்கையில் ஈடுபட்ட 3 காவல்துறை அதிகாரிகளும் கைது செய்யப்பட வேண்டும் என சமூக தலைவர்கள் மற்றும் மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதே சமயம் கெந்துக்கி நகரில் இரண்டாவது நாளாக இடம் பெற்று வரும் கலவரங்களில் நீதிமன்றம் ஒன்று தீயிடப்பட்டுள்ளது.

இதனிடையே, வெள்ளை மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியதால் அது சில மணிநேரம் மூடப்பட்டதாக அமெரிக்க தொலைக்காட்சி ஒன்று தெரிவித்துள்ளது. பல இடங்களில் காவல்துறையினரின் வாகனங்கள் தீயிடப்பட்டுள்ளன.

கைது நடவடிக்கைகளின் போது கறுப்பு இன மக்களை சுட்டுப் படுகொலை செய்வது, கடும்போக்குடன் நடத்துவது போன்ற சம்பவங் கள் அமெரிக்காவில் அதிகரித்து வருவதுடன், அதனை வெள்ளையின காவல்துறை அதிகாரிகளே மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

றுவாண்டாவில் இனஅழிப்பில் ஈடுபட்ட அரசியல்வாதிக்கு ஆயுள் தண்டனை

றுவாண்டாவில் 1994 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இனஅழிப்பில் 25,000 இற்கு மேற்பட்ட மக்களை படுகொலை செய்வதற்கு கட்டளை யிட்ட முன்னாள் அரசியல்வாதியான லடிஸ்லாஸ் நகன்ஸ்வாவுக்கு றுவண்டா நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

றுவாண்டாவின் தென்பகுதி நகரான நாகிசூ நகரத்தின் முன்னாள் நகரசபைத் தலை வரான நகன்ஸ்வாவுக்கு எதிராக 1996ஆம் ஆண்டு தன்சானியாவை தளமாகக் கொண்ட அனைத் துலக நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம் பெற்றி ருந்தது.

ருற்சி இன மக்களுக்கு எதிராக றுவண்டா வில் இடம்பெற்ற இனஅழிப்பு, படுகொலைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான குற்றங்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இந்த விசாரணைகளின் முடிவில் அவரு க்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டதாக நீதிம ன்ற பேச்சாளர் ஹரிசன் முட்டாபசி கடந்த வியா ழக்கிழமை (28) தெரிவித்திருந்தார்.

ருற்சி இன மக்கள் சுற்றிவளைக்கப்பட்டு அவர்களின் படையினரிடம் இருந்த ஆயுதங்களை அகற்றிய பின்னர் கூட்டமாக படுகொலை செய் யப்பட்டிருந்தனர். 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற இந்த படுகொலைக்கான உத்தரவுகளை குற்றவாளி வழங்கியிருந்தார்.

றுவாண்டாவின் அருசா பகுதி நீதிமன்ற மும், நெதர்லாந்தின் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றமும் இணைந்து இந்த விசாரணையை மேற்கொண்டிருந்தன. றுவாண்டாவில் இடம்பெ ற்ற இனப்படுகொலைகளில் 800,000 பேர் படுகொ லை செய்யப்பட்டிருந்தனர். அங்கு இடம்பெற்ற உள்நாட்டு போரின் இறுதி 4 மாதங்களில் இது இடம்பெற்றிருந்தது.

எனினும் இந்த தீர்ப்புக்கு எதிராக தாம் மேன்முறையீடு செய்யப்போவதாக நகன்ஸ்வா வின் சட்டவாளர்கள் தெரிவித்துள்ளார். சாட்சிய மளித்தவர்களின் வாக்குமூலங்களில் குழப்பங்கள் உள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு காணொளி மூலம் வழங்கப்பட்டிருந்தது. நகன் ஸ்வா 2015 ஆம் ஆண்டு கொங்கோ குடியரசில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். அதன் பின் னர் 2016 ஆம் ஆண்டு அவர் றுவாண்டா அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இவர் தொடர்பில் தகவல் தருபவர்களுக்கு 5 மில்லியன் டொலர்கள் சன்மானம் தருவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது. 25 வருடங்களாக தலைமறைவாக இருந்த பின்னர் கடந்த வாரம் பிரான்ஸ் இல் வைத்து மற்றுமொரு இனப்படுகொ லையாளியான பெலிசின் கபோகா என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில் தற்போதைய தீர்ப்பு வெளிவந்துள்ளது.

செல்வந்தவர்த்தகரானஇவர்,இனப்படுகொ லைக்கு நிதி உதவி வழங்கியதுடன், அதற்கான தகவல்களையும் ஒளிபரப்பியிருந்தார். கைது செய் யப்பட்டவர் பிரான்ஸ் நீதிமன்றத்தில் கடந்த புதன் கிழமை (27) முன்னிலைப்படுத்தப்பட்ட போதும், அவர் தனது குற்றங்களை மறுத்திருந்தார். எனினும் தன்னை ஆபிரிக்காவிற்கு நாடுகடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே, றுவாண்டாவில் இடம் பெற்ற இனப்படுகொலை தொடர்பில் அனைத் துலக குற்றிவியல் நீதிமன்ற விசாரணைக்கான பொறிமுறை கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள் ளது. அதில் றுவாண்டாவின் முன்னாள் பாது காப்பு அமைச்சர் மற்றும் அரச தலைவர் பாது காப்பு பிரிவின் தலைவர் ஆகியோர் குற்றவாளி களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் பாதுகாப்பு அமைச்சர் ஏற்கனவே மர ணமடைந்து விட்டார், மற்றயவர் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றார்.

சீன மாணவர்களை வெளியேற்ற அமெரிக்கா திட்டம்

கொங் கொங் மற்றும் கொரோனா வைரஸ் விவகாரங்கள் தொடர்பில் அமெரிக்காவிற்கும் சீனாவுக்கும் இடையில் அதிகரித்து வரும் முறுகல் நிலையை தொடர்ந்து அமெரிக்காவில் கல்வி கற்கும் சீன மாணவர்களை வெளியேற்றுவதற்கு அமெரிக்கா திட் டமிட்டு ள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

சீனாவைச் சேர்ந்த மாணவர்கள் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழக ங்களில் இருந்து தொழில் நுட்பங்களை திருடு வதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கல்வி கற்கும் சீன மாண வர்களில் சீனாவின் உளவுத்துறை மற்றும் சீன விடுதலை இராணுவத்துடன் தொடர்புள்ள பலர் இருப்பதாகவும், அது அமெரிக்காவின் பாதுகாப் புக்கு அச்சுறுத்தலானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கேட்பாரற்று கிடக்கும் ... தொடர்ச்சி...

நீர் வார்க்கும் யானைகளின் உருவம் எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்நாட்டின் கீழடிக்கும் கிழக்கிலங்கையின் பூர்வீக தமிழ் குடிகளின் வாழ்விடங்களுக்கும் நாம் பல ஒத்தியல்புகளை காண்கின்றபோதும், இங்கு சில வேறுபாடுகளும் காணப்படுவது வெளிப்படை.

கீழடியில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில், அங்கு வழிபாட்டு மரபொன்று இருந்ததாக அறிய முடியவில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். கிழக்கிலங்கையில் பூர்வீக தமிழர்கள் வழிப்பாட்டுடனான வாழ்க்கை முறையொன்றை கொண்டிருந்தனர் என்பது மிகவும் வெளிப்படையாக தெரிகிறது.

திருகோணமலையின் திருக்கரசை பகுதியிலும், மட்டக்களப்பின் வந்தாறுமூலைப் பகுதியிலும் காணப்படும் வழிபாட்டு சின்ன ங்களை இதற்கு எடுத்துக்காட்டுக்காகக் கூற முடியும். இவற்றில் 'மணிநாகன்' என்ற பெயர் தமி ழ் பிராமியில் பொறிக்கப்பட்டுள்ளமை வெளி ப்படை.

இவ்வாறு முன்பு என்றுமில்லாதவாறு இலங்கைத் தீவில் தமிழர்களின் தனித்துவமான மொழி, பண்பாட்டு விடயங்கள் இன்று வெளிப் பட்டு நிற்கின்றன. ஆனால் இவை தொடர்பாக தமிழினம் எந்தளவு அக்கறை கொண்டுள்ளது என் பது தெரியவில்லை. ஏற்கனவே எமது வரலாற்று ஆதாரங்கள் பல அழிக்கப்பட்டு விட்டன. வேறு பல மறைக்கப்பட்டுள்ளன. ஏன் காணாமல் ஆக் கப்படவும் செய்கின்றன. இன்னும் பல ஆக்கிரமி க்கப்பட்டு விட்டன.

"கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடு செய்து பாதுகாப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஜனா திபதி செயலணி ஒன்று அமைக்கப்படும்" என்ற சிறீலங்கா அரசின் அறிவிப்பொன்றும் சாதாரண மானதல்ல.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பையடுத்து, எமது அரசியல்வாதிகள் வழமைபோல் அறிக்கை கள் விடுகின்றனர். இவற்றுக்கு அப்பால் அவர்கள் எதுவும் செய்வதில்லை. 'பௌத்த மயமாக்கல் முயற்சி' என்கின்றனர் சிலர். 'நில ஆக்கிரமிப்பு' என்கின்றனர் வேறுசிலர்.

ஆனால் இது அதைவிட மிகவும் ஆழமான நோக்கங்களை கொண்டதாகவே ஊகிக்க முடிகி றது. கிழக்கில் கிட்டத்தட்ட 375 இடங்கள் பௌத்த சமயத்துடன் தொடர்புடைய இடங்களாக சிறீ லங்கா அரசால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக கிழக்கு ஏன் குறிவைக்கப்பட்டு ள்ளது, என்பதை நாம் இப்போது ஓரளவுக்கேனும் புரிந்து கொள்ள முடியும். கிழக்கில் உள்ள தமிழ ரின் வரலாற்று சான்றுகள், கிழக்கில் உள்ள தமி ழர்களுக்கு மட்டுமோ அல்லது இலங்கைத் தமி ழர்களுக்கு மட்டுமோ உரித்தானவையல்ல. அவை ஒட்டுமொத்த உலகத் தமிழினத்தின் உயரிய முது சங்கள்.

தமிழரின் தாயகப் பகுதிகளில் உள்ள இதுபோன்ற பூர்வீக வரலாற்றிடங்களை, தொல்லி யல் சான்றுகளை அழிவுகளிலிருந்து, ஆக்கிரமிப்பு களிலிருந்து பாதுகாத்து அவற்றை நிலை நிறுத்த தமிழர்களாகிய நாம் எம்மாலான முயற்சிகளை ஒ ன் றி ணை ந் து மே ற் கொ ள் ள வே ண் டி ய வேளையிது.

• • •

பாடசாலையில் ... தொடர்ச்சி...

ரணமாக பருத்தி பற்றி கற்கும் போது அந்த தொழிலையும் அனுபவ ரீதியாகக் கற்று மேற் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கல்வியு டன் இணைந்த வகையில் ஊதியத்துடன் கூடிய அறிவு பெற்றுக் கொள்ள முடியும் என்கின்றார். இதனடிப்படையில் இந்தியாவில் 445 பாடசாலை கள் ஆதாரக் கல்வியைப் பின்பற்றி உருவாக்கப் பட்டுள்ளன.

தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப் பட்டுள்ள 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி முறைமை தொழிற் பயிற்சியுடன் கூடிய அனுபவக் கல்வியாக மாணவர்கள் அனைவரும் 13 வருடம் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரண தரப் பொதுப் பரீட்சையில் தோற்றி சித்தியடையாத மாணவர்களே இக்கல்வி மூலம் தமது வாழ்க்கையின் தொழிலிற்கான அனு பவ கல்வியினை 2 வருடங்கள் பெற் றுக் கொள் கின்றனர். 2017இல் இருந்து ஆரம்பிக்கப்ப ட்ட இத்திட்டத்தில் உணவு பதப்படுத்தும் கல்வி, கலை மற்றும் கைவினை போன்ற 26 தொழிற் கல்வி அனுப வரீதியான கற்கைக்கு உட்படுத்தப்ப டுகின்றது.

இப்பாடங்கள் சொற்ப அளவிலான அறி முறைகளாகவும்(theory) கூடிய அளவான பிர யோக பயற்சிகளாகவும் (practical skills), பாடசா லைக்கு வெளியேயான தொழில் நிறுவன பயிற்சி களாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு முன்னெ டுக்கப்படுகின்றன.

மேற்கூறிய விடயங்களின் படி அனுப வக் கல்வி பற்றிய நடைமுறையும் கலைத் திட் டமும் மாற்றமுற்றாலும், எந்த அளவிற்கு சாத்திய மாகின்றது என்பது கேள்விக்குறியே. ஜரோப்பிய நாடுகளில் வெற்றி நடைபோடும் அனுபவக் கல்வி தொடர்பான அனுபவம் இலங்கைக்கு முற்றுமுழுதாகக் கிடைக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

அந்த வகையில் பல கொள்கைகளும் நடைமுறைசார் விளக்கமும் பல கல்வியியலாளர்க ளுக்கு காணப்பட்டாலும் வளப்பிரச்சினை அனுப வக்கல்விக்கு தடையாகவே உள்ளது. இவ்வாறான தடைகளையும் சவால்களையும் எதிர் கொண்டு கல்வி வளர்ச்சி அடைந்த ஏனைய நாடுகளைவிட இலங்கை கல்வி வளர்ச்சிக்கான பயணத்தில் வெற்றியடைய கல்விமான்களும் புத்தி ஜீவிகளும் நடைமுறைசார் சீர்திருத்தங்களை முன்னெடுத் தால் எதிர்காலத்தில் இலங்கைக் கல்வி தரம் மென் மேலும் உயரும் சாத்தியம் உள்ளது.

ச.பிரியசகி
2ம் வருட சிறப்புக் கற்கை
கல்வி பிள்ளை நலத்துறை
கிழக்குப்பல்கலைகழகம்

யாழ் நூலக ... தொடர்ச்சி...

திசநாயக்கா அதனை எதிர்த்தார். தேர்தல் நடை பெற்றது. தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாள் திரு.காமினி நிறைய ஆட்களைக் கூட்டிக் கொண்டு யாழப்பாணம் சென்றார். யாழ் ப்பாணம் சென்ற அவர் அங்கு நிறைய வாக்குப் பெட்டிகளைச் சேகரித்து கள்ள வாக்குகளைப் போட்டார். இதனை நான் கூறவில்லை. பாராளு மன்றத்தில் காமினி திசநாயக்கா பிரசன்னமாக இருந்த போது, கூட்டணியின் செயலதிபர் ஆற் றிய உரை என்னிடம் உள்ளது. மாவட்ட அபிவி ருத்திச் சபைத் தேர்தல்களில் சதி நாசவேலைக ளைச் செய்த பின்னர் ஒரு சர்வதேச நூல் நிலைய மான யாழ்.பொது நூலகம் எரி யூட்டப்பட்டது. வாக்குச் சீட்டுக்களால் நீதியைப் பெறுவதற்கு எமது தலைவர்களால் முடியா விடில் நாங்கள் நீதியைக் குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ்த் தீவிரவாதிகள் நினைத்தனர். இப் படித்தான் அவர்கள் தீவிரவாதச் செயல்களில் இறங்கினார்கள். காமினி திசநாயக்கா யாழ்ப்பா ணத்தில் தேர்தல்களில் தலையீடு செய்தார் என் பது இரகசியமல்ல. 300 பேர் தேர்தல் கடமைகளைச் செய்யவென அவரால் அழைத்துச் செல்லப்பட்ட னர். பல வாக்குச் சீட்டுப் பெட்டிகள் காணாமல் போயின." என்பது சிறீலங்காவின் முன்னாள் அரச அதிபர் பிரேமதாசா சாட்சியம் பகர்ந்து உள்ளதுடன், மக்களாட்சியில் மறுப்பை காமினி ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்தியமையும், சிறீல ங்கா சட்ட ஆட்சியை நடுநிலையுடன் முன்னெடுக் காததுமே தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்புக்கு ஆயுத எதிர்ப்பை முன்னெடுக்க வேண்டி வந்தது என்ற உண்மையையும் உலகுக்குப் பிரேமதாசா தெளிவாக்கினார்.

அத்துடன் 1981 மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலின் பொழுது இக்கட்டுரை ஆசி ரியராகிய நான் யாழ்ப்பாணத்தின் தமிழர் கூட் டணி வேட்பாளர் சூவைப்பிள்ளை அழகையா அவர்களின் 13ம்வட்டாரத் தேர்தல் வாக்களிப்பு நிலையமான சென். யோன்ஸ் கல்லூரியில் அவ ரின் முகவராகக் கடமையாற்றிக் கொண்டி ருந்த நேரத்திலேயே ஊரடங்குச் சட்டம் அமுலாகிய தால் வீட்டுக்குத் திரும்புவதற்கு மிகவும் கஸ்டப் பட்டேன். ஆனால் அந்த ஊரடங்குச் சட்டத்துக்கு மத்தியில் தான் ஊரே எரிக்கப்பட்ட கொடுமையை யும் கண்டேன். படை யினரே இவற்றைச் செய்தனர் என்பதற்கான உயிர்ச் சான்றுகளாக இன்றும் நாம் உள்ளோம்.

யாழ்ப்பாண 1981 ஆனிமாத அசம்பாவிதங்களுக்கு நான்கு நோக்கிருந்தன.

1. ஒன்று தமிழர்களின் மக்களாட்சிக்குப் பலமாக உள்ள அவர்களின் கல்விப்பலத்தை அழிப்போம் என்னும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எச்சரி க்கையாக யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்ப ட்டது.

2. தமிழர்களின் தொழில் செய் உரிமைகள் மறுக்கப்ப டும் என்னும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எச்சரிக்கையாக யாழ்ப்பாண நகரத்தின் கடைகள் வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டன.

3. யாழ்ப்பாண மக்களின் சொத்துக்களை நாம் நினைத்த மாதிரி அழிப்போம் என்னும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எச்சரிக்கையாக யாழ்ப் பாணப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்களின் வீடு எரிக்கப்பட்டு அவரும் அவரின் மனைவியும் ஏதிலிகளாக வீட்டுப் பின்புற மதிலேறிக் குதித்து உயிருக்காகத் தப்பியோடினர்.

4. நான் செய்தியாளராகவும் கட்டுரையாளராகவும் பணியாற்றிக் கொண்டிருந்த ஈழநாடு தினஇதழ் அலுவலகம் எரிக்கப்பட்டு ஈழத்தமிழர்களின் பத்தி ரிகைச் சுதந்திரத்தைச் சிங்கள பௌத்த பேரி னவாதம் எச்சரித்தது.

இவைகள் எல்லாம் யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு என்பதை உலக வரலாற்றில் பண்பா ட்டு இன அழிப்பொன்றின் வரலாற்றுச் சான்றாக மாற்றியது. இன்று யாழ்ப்பாண பொது நூலக எரிக்கப்பட்டு 49 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் ஈழத்தமிழர்களின் சுதந்திரமான மக்களாட்சி பங் களிப்பு சிறீலங்காவால் தொடர்ந்து மறுக்கப்படு கிறது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களின் அரசியல் உரிமைகளை மக்களாட்சி முறை மூ லம் பெற இயலாத நிலையும் தொடர்கிறது. சிறீ லங்காவின் ஈழத்தமிழர்கள் மீதான பண்பாட்டு இனஅழிப்பும் பலவழிகளில் தொடர்கிறது. இந் நிலையில் புலம்பெயர் தமிழர்கள் இந்த உண்மை களைத் தாங்கள் வாழும் நாடுகளின் மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் எடுத்துச் சொல்லி ஈழத் தமிழர் உரிமைகளை உலகம் தன் தலையீட்டால் காத்திட உதவிடல் அவசியமாகிறது.

• • •

மனித வாழ்வில் கோவிட்-19:

பகுதி 01

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களின் இறுதியில் மனிதகுலம் கோவிட்-19 நோயின் தாக்கத்தினால் நிலை குலைந்து நிற்கிறது என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாக விளங்குகிறது. இந்நிலைக்கு யார் காரணம் என இனங்காணவும் குற்றம் சுமத்தவும் தயாராகி வரும் நாடுகளும், "வல்லுநர்களும்" இது ஒட்டுமொத்த மனித குலத்தின் தவறுகளின் விளைவு என்பதை விளங்கி கொள்ளாத வரை நாம் ஒவ்வொருவரும் இவ்வாறான நெருக்கடிகளுக்கு தொடர்ந்தும் முகம் கொடுக்க வேண்டியவர்களாகவே இருப் போம். எனவே எமது சந்ததி மிகப்பெரும் நெருக் கடிகளுடனே போராடி வீழவும், வாழவும் தம்மை தயார் படுத்திக் கொள்வதே இன்று எம் முன்னே உள்ள ஒரே வழி.

பிறப்பு

உலகளாவிய பிறப்பு வீதத்தின் அடிப் படையில் கோவிட்-19 தொற்றின் தாக்கம் பாரி யளவில் தொடங்கிய மார்ச் 2020 முதல் டிசம்பர் 2020 வரையான ஒன்பது மாத காலப் பகுதி யில் மட்டும் 116 மில்லியன் பிறப்புகள் ஏற்படும் என கணிக்கப்படுகிறது. இதில் பெரும்பாலான பிறப்புகள் ஆசிய நாடுகளிலேயே இடம் பெறும் என்பதுடன் இந்நாடுகள் ஏற்கெனவே தாய் மர ணம், சிசு மரண வீதங்களை அதிகளவில் கொண் டிருப்பதுடன் மருத்துவ வசதிகளிலும் பின்தங்கி உள்ளன. இம்மருத்துவ வசதிகள் கோவிட்-19 தாக்கத்தால் மேலும் குறைவடைவதுடன், இதனால் தாய் சேய் மரண வீதம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதைபுறந்தள்ளமுடியாது.அதேவேளைஇன்று வரையான ஆய்வுகளின் அடிப்படையில் கர்ப் பிணிகளிடையே யான கோவிட்-19 இன் தாக்கம் குறைவாக காணப்படுவதும் சிசுக்கள் தாயின் கரு விலிருந்து இந்நோய் தொற்றுக்கு ஆளாவது உறு திப் படுத்தப்படவில்லை. அதே நேரம் கருவிலிரு க்கும் போது தாய்க்கு தொற்று ஏற்பட்ட சந்தர்ப்ப ங்களில் சிசுக்களின் நோயெதிர்ப்பு பாயம் சுரக்க ப்பட்டிருப்பதும் சில ஆய்வுகளில் தெரிய வந்து ள்ளது. எனவே பிறப்பின் மீதான கோவிட் -19 இன் தாக்கம் இன்றுவரை பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தாது என்றே கருதப்படுகிறது. எனினும் இந்நோயின் நீண்டநாள் விளைவுகளை எதிர்வரும் ஆண்டுகளிலேயே உறுதியாக கூற முடியும்.

குழந்தைப்பிராயம், சிறுவர் கல்வியும் திறன் விருத்தியும்

கோவிட் -19 நோயின் தாக்கம் சிறுவரி டையே அதிகளவில் காணப்படவில்லை என்றா லும், இன்றைய சூழல், சுகாதார சேவை வசதி குறைபாடுகள் என்பன சிறுவர் மாறன் எண்ணி க்கையை எதிர்வரும் ஆறு மாதங்களில் 1.2 மில் லியனால் அதிகரிக்க கூடும் என கணிக்கப்படு கிறது. அதுமட்டுமல்லாமல், சிறுவர்களுக்கான ஆரம்ப சமூக அறிமுக களமாக விளங்கும் முன் பள்ளி வசதிகள், சிறுவர் கல்வி, விளையாட்டு, மொழி, கலை, கலாச்சார அறிமுகம், அறிவூட்டல் என்பன சமூக இடைவெளி பேணும் செயற் பாடுகளாலும், பெற்றோரின் அதீத பயத்தினாலும் பெரும் பாதிப்புக்குள்ளாக நேரிடும். இது இக் காலப்பகுதியில் விருத்தியடையும் சிறுவர்களை சமூக உணர்வற்ற தனித்து வாழும் முனைப்பையும், பிறரிலிருந்து விலகி, பரந்துபட்ட நட்பு, உறவு சமூக ஒருங்கிணைவு என்ப வற்றிலிருந்து வாழ தலைப்படும் ஓர் சமூகத்தை எதிர்காலத்தில் ஏற் படுத்த ஏதுவாகி விடும் என மானுடவியல் அறிஞ ர்கள் அச்சம் தெரி விக்கின்றனர்.

ஆதித்யன்

வாலிப வாழ்வும் இளைய தலைமுறையும்

கோவிட்-19 இன் தாக்கமானது ஏற்கென வே கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் கிட்டா மல் பெரும் அழுத்தத்திற்கு உட்பட்டு வந்த இளைஞர்களையும், யுவதிகளையும் மேலும் மோச மான பாதிப்புகளுக்கு உள்ளாக்கும் என கணிப் பிடப்படுகிறது. உலகளாவிய கோவிட் -19 நோய் தாக்கத்திற்கு முன்னர் 126 மில்லியன் இளையோர் வேலைவாய்ப்புகளின்றி வறுமை நிலைக்கு தள்ள ப்பட்டுள்ளதாக உலக தொழிலாளர் அமைப்பு

கணிப்பிட்டிருந்தது. மேலும் தற்போது வேலை வாய்ப்பை பெற்றுள்ள இளைஞர்களில் 77 வீதமா னோர் தற்காலிக சுய வேலைவாய்ப்புகளையே பெற்று வாழ்ந்து வருவதாக இக்கணிப்பீடு கூறு கிறது. இ தனால் இளம் பெண்கள் அதிக பாதிப்பிற் குட்பட்டிருப்பது இன்னுமொரு வகை பாதிப்பாக அமைந்துள்ளது. அதேவேளை உயர்தர மற்றும் பல்கலைக்கழக கல்வியை தொடரும் இள வயதி னரும் இந்நோயின் தாக்கத்தால் கல்வியை தொடர முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்ற இளையோரின் தொகை 1.5 பில்லியன் என கணிப்பிடப்படுகிறது.

மேலும் பெருமளவு இளையோர் விளை யாட்டு, இசை, கலைப்படைப்பு, உல்லாசப் பயணத்துறை ஆகிய துறைகளில் பங்கேற்று தம் வாழ்வை இத்துறைகளில் மேம்படுத்தி வந்து ள்ளனர். இன்றைய சூழலில் அவ்வாய்ப்புகளும் அவர்களுக்கு இல்லாமல் போயுள்ளது. இத்தொய்வு நிலை கல்வி இடை விலகல் மற்றும் சமூக நடத்தை பிறழ்வுகளுக்கும் காரணியாகி எதிர்கால சமூக த்தை பெருமளவு பாதிக்கும் என்பதும் எதிர்கால மனிதகுல வளர்ச்சியை பாதிக்கும் ஓர் காரணியாக அமையப் போகிறது என்பதும் சமூகவியலாளர் களுக்கு பெரும் கவலையாக உள்ளது.

நடுத்தர வயதினர்

நடுத்தர வயதினரை பொறுத்தவரை அவர் கள் பலமுனை தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக உள்ளனர். கோவிட்-19 நோயின் தாக்கத்திற்குள்ளாகும் பெரும்பாலானோர் நடுத்தர வயதினராக அமைவதுடன் தற்போதைய தொழில் வாய்ப்பின்மை அல்லது தொழில் இழப்பு, குடும்ப சுமை, பிற தொற்றா நோய்கள், என அனைத்து துயரங்களுக்கும் முகம்கொடுக்கும் சூழலில் இவ் வயதினரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதிகரி த்த குடும்ப பிணக்குகளாலும், கடன் சுமைகளா லும் மன அழுத்தத்திற்கும், நோய்களுக்கும் இலக் காகி தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் பெரும் பாலானோர் நடுத்தர வயதினர் என இனம் காணப் பட்டுள்ளனர்.

முதியோர்

கோவிட்-19 நோய் தாக்கத்தினால் அதிகளவு

இறப்புக்குள்ளாகி வருபவர்கள் முதியோர்களா கவே காணப்படுகின்றனர். இதனால் பல முதியோர் இல்லங்களில் பெருமளவான முதியோர் இறந்த மையும் நாம் அறிந்ததே. இதற்கும் அப்பால் தனிமைப்படுத்தலில் இவர்களே அதீத கவனம் மேற்கொள்ளப்படவேண்டியவர்களாகதிகழ்கிறார் கள். இதனால் கடந்த மூன்று மாதங்களாக தனி மை ப்படுத்தப்பட்டு வரும் முதியோர்கள் சொல் லொணா மன உளைச்சலுக்கும், பிற நோய்க ளுக்கான பராமரிப்பின்மைக்கும் ஆளாகி வருகி ன்றனர். அண்மைக் காலங்களில் நடை முறைப் படுத்தப்பட்டு வந்த 'நலமுடன் முதுமையை வர வேற்றல்' எனும் செயற்றிட்டம் செயலிழந்து முதியோர் பாதுகாப்பு காரணமான பரிதாப வாழ் வுக்கு உள்ளாகி வருகின்றனர். இந் நோயினால் ஏற்படும் முதியோர்களின் அதிகரித்த இழப்பானது ஒவ்வொரு சமூகத்தினதும் அனுபவ பதிவேடுகள் பிரதி பண்ணப்படாமலே அழிந்து வருவதற்கு ஒப்பானது என்றால் அது மிகையாகாது.

https://www.unicef.org/press-releases/pregnant-mothers-and-babies-born-during-covid-19-pandemic-threatened-strained-health
https://www.health.harvard.edu/blog/pregnant-and-worried-about-the-new-coronavirus-2020031619212#q7
https://www.thelancet.com/action/showPdf?pii=S2214-109X%2820%2930238-2

• • •